# தொழில்நுட்பக் கோளாறு: மெட்ரோ ரயில் சேவை சிறிது நேரம் பாதிப்பு

சென்னை, மே 12: நேரு பூங்கா மெட்ரோ ரயில் வழித்தடத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால், மெட்ரோ ரயில்களின் சேவை 15 நிமிடங்கள் வரை பாதிக்கப்பட்டது.

சென்னையில் மெட்ரோ ரயில்கள் வண்ணாரப்பேட்டை-விமான நிலையம் முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் சராசரியாக 90 ஆயிரம் முதல் ஒருலட்சம் பேர் வரை பயணம் செய்கின்றனர். ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாள்களில், அதிகாலை முதல் இரவு வரை ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இந்நிலையில், நேரு பூங்கா மெட்ரோ ரயில் தடத்தில் திடீரென ஞாயிற்றுக்கிழமை காலை தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதனால், பச்சையப்பன் கல்லூரி-சென்ட்ரல் இடையே ரயில்கள் இயக்கத்தில் தடை ஏற்பட்டது.

இதற்கிடையில், மெட்ரோ ரயில் பொறியாளர்கள் அங்கு விரைந்து தொழில்நுட்பக் கோளாறை சரிசெய்யும் பணியில் ஈடுபட்டனர். தொழில் நுட்பக் கோளாறை துரிதமாகச் சரிசெய்தனர். இதன்பிறகு, ரயில்கள் வழக்கம் போல இயக்கப்பட்டன. நேரு பூங்காவில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறின் காரணமாக, 15 நிமிடங்கள் வரை ரயில்களின் சேவையில் பாதிப்பு ஏற்பட்டது.